பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 02 வெள்ளிக்கிழமை 18.11.2022 கதிர் 13

### இது ரகசியம் அல்ல!

நடுநிலை நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யதார்த்த பூர்வமாகச் சிந்திப்பதில்லை என்ற சாரப்பட எங்கள் பத்திரிகையில் செய்திகள், கருத்துக்கள் வருகின்றன எனக் குறை கூறினார் அவர்.

2

## ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்த

# 6 பேர் விடுதலையை எதிர்த்து இந்திய அரசு மேன்முறையீடு!




### உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல்

**புதுடெல்லி,நவம்பர்18**

**ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகள் சிறையிலிருந்த 6 பேரை விடுவித்து கடந்த நவம்பர் 11 ஆம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) பிறப்பித்த உத்தரவை எதிர்த்து இந்திய மத்திய அரசு அதே சுப்ரீம் கோர்ட்டில் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது.**

2

## ஹெரோயினுடன் பிக்கு பிடிபட்டார்

நாற்பது மில்லி கிராம் ஹெரோயினுடன் பௌத்த பிக்கு ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புலத்சிங்கள பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் வசிக்கும் 36 வயதுடைய பௌத்த பிக்கு ஒருவரே

2

## அரசையும் மத்திய வங்கி ஆளுநரையும் கந்தக்காட்டுக்கு அனுப்ப வேண்டுமாம்!

### புனர்வாழ்வளிக்க என்கிறார் உதய கம்மன்பில



கொழும்பு,நவ.18

நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் அடிமையாகியுள்ளார். அதே போல் கடனைப் பெறுவதிலும் எங்களது அரசாங்கம் அடிமையாகியுள்ளது. எனவே அரசாங்கத்தையும், ஆளுநரையும் புனர்வாழ்வளிக்க கந்தக்காட்டுக்கு அனுப்ப வேண்டும் என நாடாளுமன்ற

2

## மாங்குளத்தில் விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்



(சண்முகம் தவசீலன்)

கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் 222 ஆவது கிலோமீற்றர் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் வானுடன் மோட்டார் சைக்கில் மோதி இடம் பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் நகரில் உள்ள வவுனியா வடக்கு பல நோக்கு

2

## மடிக்கணினி வெடித்தில் மாணவன் உயிரிழந்தான்

### அம்பலாங்கொட பகுதியில் சம்பவம்

கொழும்பு,நவ.18

படபொல கொபெய்குடுவ பிரதேசத்தில் மடிக்கணினி வெடித்துச் சிதறியதில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளான்.

2

## கோட்டா முகாமுக்கு காணி சுவீகரிக்க இரகசிய முறையில் நில அளவீடு முயற்சி

### காணி உரிமையாளர்களில் சிலர் நேற்றும் போராட்டம்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் கடற்படை தளத்திற்கான காணி சுவீகரிப்பிற்கு மக்கள் தொடர்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில் நேற்றையதினம் கொழும்பில் இருந்து வருகை தந்த நில அளவை திணைக்கள அதிகாரிகளால் இரகசிய முறையில் காணி

2

## செம்மணிக் குளத்தில் மூழ்கிய இளைஞரை சடலமாக மீட்டனர்

யாழ்ப்பாணம் செம்மணி குளத்தில் நேற்று முன்தினம் நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்த இளைஞர் நீண்ட நேர தேடுதலின் பின்னர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.



யாழ். செம்மணிக் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் பின்னர்

2

## வசந்த முதலிகே,தம்ம தேரர் விளக்கமறியலுக்கு மாற்றம்!



சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர்கள் வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார் எனப் பொலிஸ்

2

## துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் உயிரிழப்பு

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கதிர்காமம், தெட்டகமுவ பிரதேசத்தில் வசிக்கும்

2

## இன்று 'கார்த்திகை வாசம்' மலர்க் கண்காட்சி ஆரம்பம்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் தோறும் நடத்தும் கார்த்திகை மாத மலர்க் கண்காட்சி இன்று தொடங்குகின்றது.

அது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

2

## 22 வருட கொடுஞ் சிறைவாசத்தின் பின் நேற்று வெளியில் வந்தார் ரகுபதி சர்மா!

### 300 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 வருடங்கள் புதிய மகஸின் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வந்த பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி தலையீட்டில் எதுவித நிபந்தனைகளுமின்றி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2000ஆம்

2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"உங்களுக்குக் காணொலி ஒன்று அனுப்புகிறேன். பாருங்கள். எப்படி யதார்த்த பூர்வமாக அவர் சிந்திக்கின்றார் என்பதை" என்றார் அந்த நண்பர்.

அவர் அனுப்பிய காணொலியைப் பார்த்தேன். ஆச்சரியமாக இருந்தது. சர்ச்சைக்குரியதாயினும், யதார்த்த பூர்வமாகப் பேசியிருந்தார் கஜேந்திரகுமார்.

இப்போதுரணிலின்அரசுநினைவேந்தல்களுக்கான தடைகளைத் தளர்த்தி இருக்கின்றது. விடுதலைப்புலிகளுக்கான நினைவேந்தலாக இல்லாமல், இறந்த உறவுகளுக்கான நினைவேந்தல்களைக் கொண்டாடலாம் என்ற அளவில் தளர்வு.

அதை ஒட்டி யதார்த்த பூர்வமாகச் சிந்தித்து, அந்தக் காணொலியில் கருத்து வெளியிட்டிருந்தார் கஜேந்திரகுமார் என்று தோன்றியது.

அந்தக் காணொலி வடிவைச் செய்தியாக்கி இருப்பின் என் தலைப்பும் செய்தியின் முதல் பந்தியும் இப்படி அமர்ந்திருக்கும்:-

'உரிமைப் போராட்டத்துக்காக உயிர் நீத்த சகலரதும் வீரவணக்க தினமாக மாவீரர் நாளை அனுஷ்டிப்போம்! கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவிப்பு'

'மாவீரர் தினத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய மாவீரர்களுடைய ஒரு நிகழ்வாக மட்டும் அனுஷ்டிக்காமல், ஒட்டுமொத்த விடுதலைப் போராட்டத்துக்காக உயிர்நீத்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் இதை நடத்துவோம் என்று தீர்மானித்துள்ளோம்.'

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் அறிவித்திருக்கின்றார்.

- இதுதான் என் செய்தியின் வடிவமாக இருக்கும்.

ஏனைய இயக்கங்களில் இருந்தும் விடுதலைப் போராட்டத்திற்காக உயிரிழந்தவர்கள் மற்றும் பொதுமக்களை மாவீரர்களாக அங்கீகரித்து மரியாதை செய்யும் இணக்கத்திற்கு கஜேந்திரகுமார் வருவது என்பது உண்மையில் யதார்த்த பூர்வமான நடவடிக்கைதான்.

சரி. இதை நான் ஏன் முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக்கி பரபரப்பாகப் பிரசுரிக்காமல், எனது பக்தியில் தகவலாக்கி, அதை அமுக்கி வாசிக்கிறேன் என்று நீங்கள் கேட்க விழைவது புரிகின்றது. அதற்கு பதில் அளிக்க முதல், கஜேந்திரகுமாரின் அந்த உரையை வார்த்தைக்கு வார்த்தை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். அதை பாருங்கள். அது இப்படி அமைந்திருந்தது:-

"இன்றைக்கு எமது கட்சி மட்டத்திலே இந்த நிகழ்வைத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினுடைய மாவீரர்களின் நிகழ்வாக மட்டும் பார்ப்பதா? அல்லது இந்த உரிமைப் போராட்டத்துக்காக உயிர்நீத்த அனைத்து மக்களினுடைய ஒரு வீரவணக்கத் தினமாக இந்த நாளை அனுஷ்டிப்பதா என்பது தொடர்பாக எமது அமைப்பு மட்டத்திலே நீண்ட தொரு விவாதம் நடைபெற்றது.

"அந்த விவாதம் நடைபெற்றதற்குப் பிற்பாடு நாங்கள் அனைவரும் ஏகமனதாக முடிவெடுத்து, நாங்கள் இதைத் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய மாவீரர்களுடைய ஒரு நிகழ்வாக மட்டும் அனுஷ்டிக்காமல், ஒட்டுமொத்த விடுதலைப் போராட்டத்துக்காக உயிர்நீத்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் இதை நடத்துவோம் என்று தீர்மானித்தோம்.

"அதற்கு வேறு எந்தக் காரணங்கள் ஏதும் கிடையாது.

"அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடைய மாவீரர்களை நினைவுகூருகின்ற ஒரு நிகழ்வாக இதை நடத்தினால், அதைத் தடைசெய்து எங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய காரணத்தால்தான் நாங்கள் இது தொடர்பில் ஆராயவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

"விடுதலைப் புலிகள் என்ற கோணத்தில் மட்டும் இந்தத் தினத்தை அனுஷ்டிக்காமல் ஒட்டுமொத்தமாக இந்தப் போராட்டத்துக்கு தமது உயிரைத் தியாகம் செய்தவர்களுக்காக இந்த நிகழ்வை நடத்துவதற்கான உண்மையான காரணம் நாங்கள் எமது மக்களுக்கு உண்மையைச் சொல்லி வருகின்ற எமது பணி தொடரவேண்டும் என்பதுதான்

"இந்த நேரத்தில் நாங்கள் எமது உணர்வை மையமாகக் கொண்டு செயற்பட்டு, வெறுமனே எமது மாவீரர்களுக்கு மட்டும் அஞ்சலி செலுத்தி, எங்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்து, நாங்கள் செய்யவேண்டிய பிரதான பணியாகிய உண்மையை மக்களிடத்தில் கொண்டுசெல்வதை - அந்தப் பாரிய பொறுப்பை - நாங்கள் கைவிடுவதாக இருக்கமுடியாது."

- என்று கஜேந்திரகுமார் தமது உரையில் கூறியிருந்தார்.

சரி. இவ்வளவையும் பேசிய கஜேந்திரகுமார் அந்தக் காணொலியில் சற்று இளைஞராகக் காணப்பட்டார். குறைந்தது 7, 8 வருடங்களுக்கு முன்னர் அவர் பேசிய பேச்சாக இது இருக்கும் என்று தோன்றியது.

ஆக, ஏழு, எட்டு வருடங்களுக்கு பின்னர் வரக்கூடிய விடயத்திற்கு முன்கூட்டியே சிந்தித்து யதார்த்த பூர்வமாக இப்படி பேசி இருக்கின்றார் அவர்.

விடுதலைப் புலிகளை மட்டுமல்லாமல், விடுதலைக்காகப் போராடி மடிந்த ஏனைய தரப்பினரையும், தமிழ் மக்களையும் கூட மாவீரர் தினத்தில் நினைவேந்துகின்ற நிலைப்பாட்டில் அவர் இப்போதும் இருக்கிறாரா தெரியவில்லை. அவர் அதனைத் தெளிவு படுத்தினால் நல்லது.

**- மின்னல் -**

## 6 பேர் விடுதலையை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்த நளினி உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து சிறையில் இருந்து விடுதலையான இலங்கையை சேர்ந்த முருகன், சாந்தன், ராபர்ட்பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் திருச்சி சிறப்பு முகாமில் தனித்தனி அறைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இவர்கள் அனைவரையும் விடுவித்துப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டில் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது. மத்திய அரசு தாக்கல் செய்த சீராய்வு மனு சுப்ரீம் கோர்ட்டில் விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹெரோயினுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலத்சிங்கள பரகொட வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருளை எடுத்துச் செல்கிறார் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இந்த பௌத்த பிக்கு போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

## அரசையும் மத்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

வரவு - செலவு திட்டம் மீதான நேற்றைய நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகளவான நாணயத்தாள்களை அச்சிட்டதால் ஏற்பட்ட பணவீக்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீவிரப்படுத்தியதாக மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்திருந்தார். அப்படிக்கூறிய அவரே, வரலாற்றில் அதிகளவான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளார்.

பாதிப்புகளை அறிந்து வைத்திருந்தாலும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களால் அதனைக் கைவிட முடியாது. அதுபோலதான் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு அடிமையாகியுள்ளார். அதுபோல அரசாங்கமும் கடனைப் பெறுவதற்கு அடிமையாகியிருக்கிறது. எனவே, மத்திய வங்கியின் ஆளுநரையும், எங்களது அரசாங்கத்தையும் தந்தக்காரி புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி புனர்வாழ்வளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## மாங்குளத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பணியாற்றி வருகின்ற 21 வயதுடைய சாள்ஸ் வினோத் என்ற ஊழியர் பணிமுடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்

விபத்து தொடர்பில் சம்பவ இடத்திற்கு சென்ற கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மடிக்கணினி வெடித்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொபெய்குடுவ பென்வல வீதி, இட்டிகெட்டிய பிரதேசத்தில் வசித்து வந்த டபிள்யூ. ஏ.செனத் இதுருவ என்ற மாணவனே கணனியை மடியில் வைத்துக்கொண்டு பணிபுரியும் போது அது வெடித்ததால் உயிரிழந்துள்ளான்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்தவர் பலப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளான்.

இந்த மாணவன் அம்பலாங்கொட பகுதி பாடசாலை ஒன்றில் 9ஆம் தரத்தில் கல்வி கற்று வந்துள்ளான். இது தொடர்பான விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணிக் குளத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தில் நீராடியிருந்த நிலையில் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் காணமல் போயிருந்தார்.

இக் குளத்தை அண்மித்த பகுதியில் வசித்து வருகின்ற 21 வயதுடைய இளைஞர் ஒருவரே காணாமல் போயிருந்த நிலையில் அப் பகுதி மக்கள் உட்பட பலரும் இணைந்து இரவிரவாக நீண்ட நேரம் தேடுதல் நடத்தியிருந்னர்.

நேற்றைய தினமும் நீண்ட நேரமாக தொடர் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மதியம் அந்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார். இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இன்று 'கார்த்திகை வாசம்'

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணசபை கார்த்திகை மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாக 2014ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியது. அதன் அடிப்படையில், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் கார்த்திகையில் மரநடுகை மாதத்தைச் சிறப்பாக கொண்டாடி வருவதோடு, மலர்க்கண்காட்சி ஒன்றையும் நடாத்தி வருகின்றது.

இவ்வருடமும் மரநடுகை மாதத்தைக் கொண்டாடும் வகையில் இம்மாதம் 18ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நல்லூர் சங்கிலியன் பூங்காவில் அமைந்துள்ள மலர்முற்றம் காட்சித்திடலில் பிற்பகல் 3.00 மணிக்கு கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சி திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா. சண்முகலிங்கன் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாகச் சமூகச் செயற்பாட்டாளர் ம. செல்வின் இரேனியஸும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ச. ரவியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கண்காட்சி 27.11.2022 வரை தினமும் காலை 8.30 மணிதொடக்கம் இரவு 7.30 மணிவரை நடைபெறும். - என்று உள்ளது.

## கோட்டா முகாமுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவீடு இடம்பெற்று வருவதை அறிந்த காணி உரிமையாளர்களில் சிலர் வட்டுவாகல் கடற்படைமுகாமுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமுக்காக 617 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நில அளவீட்டு நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிந்த காணி உரிமையாளர்கள் பலர் கடற்படை முகாமிற்கு முன்னால் நேற்று முந்தினமும் ஒன்றுகூடி எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றையதினம் முல்லைத்தீவில் உள்ள நில அளவையாளர் திணைக்களத்துக்கு சென்ற கடற்படையினர் கடற்படை வாகனத்தில் நில அளவை செய்வதற்காக நாட்டப்படும் நில அளவை கற்களை ஏற்றி சென்றுள்ளதை அறிந்த காணி உரிமையாளர்களில் சிலர் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனோடு இணைந்து வட்டுவாகல் கடற்படை முகாமுக்கு முன்பாக நேற்று மதியம் காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

## வசந்த முதலிகே, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர்கள் இருவரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 90 நாள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அது முடிவடைந்த நிலையிலும், அவர்கள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை ஒட்டி அவர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த பின்னணியிலும் அவர்கள் இருவரும் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் தற்போது சாதாரண சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## துப்பாக்கிச் சூட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏர் ரைபிள் தவறுதலாக வெடித்ததால் சிறுவன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பலத்த காயமடைந்த சிறுவன் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளான்.

18 வயதுடைய இளைஞன் எடுத்துச் சென்ற ஏர் ரைபிள் ஒன்றே இவ்வாறு தவறுதலாக வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 18 வயது இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(முன்னர் வந்த செய்தி 06 ஆம் பக்கத்தில்)

## 22 வருட கொடுஞ் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த இவருக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி 300 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அன்றைய தினம் அவரது மனைவி சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன் 2015ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்யப்பட்டது.

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா தனது விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கு விண்ணப்பித்துள்ளார். இவரின் விண்ணப்பத்தை பரிசீலித்த ஜனாதிபதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரின் கவனத்துக்கு கொண்டுவந்தமையுடன் அம்மை

(12 ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் தொழில் இன்மை 2 மடங்காக அதிகரிப்பு பெருந்தோட்ட பகுதியில் ஏழ்மை நிலை 52 வீதம்!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



நாட்டில் தொழிலின்மை 2 மடங்காக அதிகரித்துள்ளது. மறுபுறம் ஏழ்மை நிலை 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த நிலைக்கு சென்றுள்ளது.

பெருந்தோட்ட பகுதியில் 52 சதவீதமானோர் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன். 29 லட்சம் பேர் புதிதாக ஏழ்மைநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான பயங்கரமான சூழ்நிலையில் அரசாங்கம் மக்கள் கலவரத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கானவரவு–செலவுத் திட்டம் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலா தயாரிக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. அரச வருமானத்துக்கும், அரசசெலவினத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

வரவு – செலவுத் திட்டத்தில் திறைசேரியில் கணக்கறிக்கை 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கு இது ஒரு தடையாக அமையும்.பொறுப்புக் கூறல் தொடர்பில் நாணய நிதியம் கேள்வியெழுப்பும். நாட்டின் உண்மை பொருளாதார நிலையை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் குறிப்பிடவேண்டும்.

அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறைக்கு சாத்தியமானவையா என்ற சந்தேகம் காணப்படுகிறது.எரிபொருளுக்கு வரி அதிகரிப்பை அரச வருமானமாக வரவு – செலவுத் திட்டத்தில் குறிப்பிடவில்லை.

எரிபொருளுக்கு வரி அதிகரித்தால் மின்சாரம் மற்றும் போக்குவரத்து சேவையின் கட்டணங்கள் பாதிக்கப்படும்.பல்வேறு காரணிகளினால் நாட்டில் எரிபொருள் பாவனை 40 சதவீதத்தாலும்,மின் பாவனை 20 சதவீதத்தாலும் குறைவடைந்துள்ளதால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள நிலையில் வரவு – செலவுத் திட்டத்தில் வீத மற்றும் உட்கட்டமைப்பு அதிகரிப்பிற்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீதியை அபிவிருத்தி செய்யும் நிலையில் நாடு இல்லை.

துறைசார் நிறுவனங்களின் செலவுகளைக் குறைந்தப்பட்சம் 10 சதவீதத்திலாவது குறைத்துக் கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை. அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதால் மாத்திரம் அரச வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியாது. இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த முயற்சிப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சமூகப்பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு வரி வீதம் அதிகரிக்கப்பட வேண்டும். வரி அதிகரிப்பால் நடுத்தர மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காண்பது தொடர்பில் அரசாங்கம் துறைசார் நபர்களுடன் கலந்துரையாடித் தீர்வு காண வேண்டும்.

அரச செலவுகளைக் குறைத்துக் கொள்ளாமல் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. சமூகக் கட்டமைப்பு தொடர்பான தகவல்களைப் புள்ளிவிவரவியல் திணைக்களம் தரப்படுத்துவதை அரசாங்கம் தடுத்துள்ளது.

நாட்டில் தொழிலின்மை 2 மடங்காக அதிகரித்துள்ளது. மறுபுறம் ஏழ்மை நிலை 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த நிலைக்குச் சென்றுள்ளது. பெருந்தோட்ட பகுதியில் 52 சதவீதமானோர் ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், நாட்டின் ஏழ்மை நிலை 26 சதவீதமாகக் காணப்படுகிறது. 29 லட்சம் பேர் புதிதாக ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான பயங்கரமான சூழ்நிலையில் அரசாங்கம் மக்கள் கலவரத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் தாங்கிக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

கட்டுமானக் கைத்தொழில் முழுமையாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. படித்த தொழிற்துறையினர் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். நாடு படித்த மனித வளமற்ற பாலைவனத்தை நோக்கிச் செல்கிறது. ஊழல் மோசடிக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் ஆண்டு முதல் எந்த சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள முடியாமல் போகும். – என்றார்.

# அரசின் தவறான தீர்மானங்களாலேயே நாடு வங்குரோத்து நிலையடைந்தது!

## அநுர பிரியதர்ஷன யாப்பா சாடல்



விவசாயத்துறையில் முட்டாள்தனமாக சேதன பசளை திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தியமை பொருளாதார பாதிப்பை சடுதியாக தீவிரப்படுத்தியது. ரஷ்யா– உக்ரைன் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னரே அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது என்ற உண்மையை அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் உண்மைத் தன்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்தவில்லை. வரவு – செலவுத் திட்டத்துக்குப் பதிலாக ஜனாதிபதி கொள்கை இலக்கை முன்வைத்துள்ளார்.

தவறான அரசியல் மற்றும் பொருளாதார தீர்மானங்களால் நாடு இன்று வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமாகுவதற்கு முன்னர் அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு, நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது என்பதே உண்மை. அரசாங்கத்தின் தீர்மானங்கள் மக்களுக்கு சாதகமாக அமையவில்லை.

அத்தியாவசியப்பொருள்களின் விலை அதிகரிப்பு ஒட்டுமொத்த மக்களுக்கும் பெரும் சுமையாக மாறியுள்ளது. விவசாயத்துறையில் சேதன பசளைத்திட்டத்தை ஒரே கட்டத்தில் அறிமுகப்படுத்தும் முட்டாள் தனமான தீர்மானம் முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சேதன பசளை திட்டத்தால் முழு விவசாயத்துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பிற்கு மத்தியில் அரசாங்கம் சுமார் 8 லட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளது, தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசிக்கு உத்தரவாத விலை வழங்காத காரணத்தால் விவசாயிகள் தமது விளைச்சலை விற்பனை செய்ய முடியாத நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதீட்டின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்தினால் சமூகக் கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டு நாட்டில் மீண்டும் மக்கள் போராட்டம் தலைதூக்கி, அது அரசியல் நெருக்கடியையும் தோற்றுவிக்கும். – என்றார்.

# கனேடியத் தமிழர் பேரவையின் கோரிக்கைகள் குறித்து அவதானம் செலுத்துவதற்குத் தயார்!

## விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு



தமிழ் மக்கள் சார்ந்து நிறைவேற்றப்படவேண்டிய 10 கோரிக்கைகளை கனேடியத் தமிழர் பேரவை முன்வைத்திருக்கும் நிலையில் அதுதொடர்பாக அவதானம் செலுத்தத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தம்மோடு இணைந்து பணியாற்றுவதற்கு முன்வருமாறு சர்வதேச நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கும் புலம்பெயர் இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் சார்ந்து நிறைவேற்றப்படவேண்டிய 10 கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்று புலம்பெயர் தமிழர் அமைப்பான கனேடியத் தமிழர் பேரவையால் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகத் தெளிவுபடுத்தும் நோக்கில் நீதியமைச்சில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டில் நிலவிய இன, மத, மொழி ரீதியான வேறுபாடுகளால் கடந்த காலங்களில் நல்லிணக்க செயன்முறை வெகுவாகப் பாதிப்படைந்திருக்கின்றது.

இருப்பினும் தற்போது இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகள் நீதியமைச்சால் தீவிர முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. எது எவ்வாறிருப்பினும் பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கே முன்னுரிமையளிக்கப்படவேண்டும்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர், அதனூடாகப் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு அவசியமான தீர்வை வழங்குவதற்கு ஏதுவான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக படையினர் வசமிருந்த பெருமளவான காணிகள் பொதுமக்களிடம் மீளக்கையளிக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் பலர் புனர்வாழ்வளிக்கப்பட்டனர்.

அதேபோன்று அண்மையில் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டதுடன், மேலும் சிறையிலுள்ள அரசியல்கைதிகள் தொடர்பாக ஆராயப்படுகின்றது.

அதேபோன்று காணாமல்போனோர் தொடர்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் அந்த விசாரணைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் மேலும் துரிதப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ்மக்கள் மத்தியில் எம்மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய வகையில் செயற்பட்டு வருகின்றோம். இவ்வாறானதொரு பின்னணியிலேயே கனேடியத் தமிழர் பேரவையின் பிரதிநிதி தமிழ்மக்கள் சார்ந்து நிறைவேற்றப்படவேண்டிய கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை என்னிடம் கையளித்திருக்கின்றார். நாம் இது தொடர்பாக அவதானம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம். அதேவேளை எம்முடன் பேச்சுகளை நடத்துவதற்கும் இலங்கையில் முதலீடு செய்வதற்கும் முன்வருமாறு சர்வதேச நாடுகளைச்சேர்ந்த புலம்பெயர் தமிழர்கள், சிங்களர்கள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என்று தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கூடிப் பேசித் தீருங்கள்!

தமிழர் தேசிய இனப் பிரச்சினையை ஒட்டி புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுகளுக்கு செல்ல முன்னர், தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் பேசி, ஒத்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என ஒரு கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அது தொடர்பாக ஆராய்வதற்குக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் விடுத்த அழைப்பு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் உட்பட பிற கட்சிகளினால் உதாசீனப்படுத்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட பின்புலத்தில் வேறு ஒரு கூட்டத்துக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

நீண்ட காலமாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் பிரதானிகளை கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு இரு பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் சேர்ந்து வலியுறுத்தியுள்ளன. இது தொடர்பாக மேற்படி இரு கட்சிகளினதும் தலைவர்கள் இரா.சம்பந்தனுக்கும் மாவை சேனாதிராசாவுக்கும் அனுப்பிய கடிதம் அவதானிக்கப்பட வேண்டியது.

* பல தடவைகள் கேட்டும் தொடர்ச்சியாக பல காலம் இக்கூட்டம் நடைபெறாமலே இருப்பது கவலைக்குரியது.
* இதனால் கூட்டமைப்பில் இருக்கும் அங்கத்துவ கட்சிகளுக்கு இடையிலான கருத்து பரிமாற்றங்கள் சீர்குலைந்துள்ளன. கருத்து வேறுபாடுகள் தோன்றுவதனால் புரிந்துணர்வு அற்ற சூழலே காணப்படுகிறது.
* அங்கத்துவக் கட்சிகளுக்கு உள்ளே ஏற்படுகின்ற பூசல்களும் முரண்பாடுகளும் அக்கட்சிகளை மாத்திரம் பாதிக்காது, ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் பாதகமாக உருவாகி வருகிறது.
* கூட்டமைப்பில் பாரிய நம்பிக்கை வைத்துள்ள தமிழ் மக்களினுடைய எண்ணங்களில் சந்தேகமும் குழப்பமும் தோன்றுவதை அவதானிக்க முடிகிறது.
* நிலைமையைச் சீர் செய்ய உடனடியாகக் கூட்டத்தைக் கூட்டுங்கள்.

– இப்படிக் கோரப்பட்டுள்ளது. அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் சரியானவை. ஆகவே கூட்டமைப்பு ஒருங்கிணைப்பு குழு உடனடியாக கூட்டப்பட வேண்டும்.

வெறுமனே கட்சித் தலைவர்கள் மட்டுமல்லாமல், கட்சிகளின் இரண்டாம், மூன்றாம் மட்டத் தலைவர்களும் சேர்ந்து இக்கூட்டத்தில் பங்குபற்றி, தங்களுக்கு இடையிலான குழப்பங்கள், கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள், குத்துவெட்டுகளை மூடிய அறைக்குள் ஒரே சமயத்தில், ஒன்றாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

தேவைப்பட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட நாள்கள் இத்தகைய புரிந்துணர்வுக் கூட்டங்களை தொடர்ந்து நடத்துவது குறித்தும் கூட்டமைப்புத் தலைமை சிந்திக்கலாம்.

## விடுமுறை விண்ணப்பப் படிவங்கள் இணையவழியில் பூர்த்தி செய்யலாம்!

### அரச ஊழியர்களுக்கு அறிவிப்பு

அரச நிறுவனங்களின் அச்சிடும் செலவைக் குறைக்கும் வகையில் விடுமுறை விண்ணப்பப் படிவங்களை இணையவழி முறையின் மூலம் பூர்த்தி செய்யும் முறையை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கையை பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு எடுத்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான முன்னோடி திட்டம் உட்துறை அமைச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த முயற்சி வெற்றியடைந்தால் நாடளாவிய ரீதியில் உள்ள அரச அலுவலகங்களில் இந்த முறை அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## புலத்சிங்கள மில்லகந்த தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு முற்றவெளியில் விசேட செயலமர்வு



இலங்கை நாடாளுமன்றத்துக்கு கள சுற்றுலா மேற்கொண்டு வருகை தந்த புலத்சிங்கள மில்லக்கந்த தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கான விசேட செயலமர்வு நாடாளுமன்ற முற்ற வளாகத்தில் இடம் பெற்றது.

இந்த செயல் அமர்வில் இலங்கை நாடாளுமன்ற பொதுச் சேவைகள் அதிகாரி திரு யஸ்ரி முஹம்மத்தினால் நாடாளுமன் றம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்க அதிகாரி துமிந்த விக்ரமசிங்க மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இப்போது நாடாளுமன்றத்தால் நினைவு நூல்கள் பாடசாலையின் நூலகசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆணைக்குழுவின் செயற்பாடே தேர்தல் பிற்போடக் காரணம்!

### சாடுகிறார் டிலான் பெரேரா



தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாட்டாலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளதாக சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சியை தோல்வியடைச் செய்ய வேண்டும் என்றார்.

தேர்தல் ஆணைக்குழு இல்லாவிட்டால், தேர்தல் திணைக்களம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலகுவாக நடத்தியிருக்கும் என டிலான் பெரேரா தெரிவித்தார்.

சமன் ரத்னாநயக்க உள்ளிட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கு, உள்ளூராட்சி தேர்தலை நடத்தும் அந்த அதிகாரத்தை எவரும் இல்லாது செய்யக்கூடாது என்று கூறினார்.

மீறி, அவ்வாறு எவரேனும் செயற்படுவார்களாயின் நாம் நீதிமன்றின் ஊடாக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனக் குறிப்பிட்டார்.

## 15 வயது சிறுமியுடன் குடும்பமாக வாழ்ந்த இளைஞன் யாழில் கைது!

15 வயது சிறுமியுடன் குடும்பமாக வாழ்ந்து வந்த 22 வயதான இளைஞன் வட்டுக் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இளைஞன் ஒருவர், சிறுமியொருவரை அழைத்து வந்து குடும்பமாக வாழ்கின்றார் என பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சிறுமியை மீட்டு, மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்துள்ளனர்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2022



“ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்.”
- அமிர்த் றே -
(இந்திய ஆன்மீகக் குரு)

# இலங்கை பெண்கள் அபுதாபியில் அடைப்பு!

## ஆள்கடத்தல் கும்பல் குறித்த புதிய தகவல்

அபுதாபியில் சிக்குண்டுள்ள இலங்கைப் பெண்கள் இலங்கையைச் சேர்ந்த பிரபல தம்பதிகளிடம் உதவி கோரியுள்ளதைத் தொடர்ந்து ஆள்கடத்தல் கும்பல் தொடர்பான தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

இலங்கையின் பிரபலமான தம்பதியினரிடம் பணியாளாக பணியாற்றிய பெண்ணொருவர் ஓமானிற்கு பணிப்பெண்ணாகச் செல்வதாகத் தெரிவித்து சென்றுள்ளார்.

சில நாள்களின் பின்னர் தனது மகளைத் தொடர்புகொண்டுள்ள அவர் தன்னையும் 16 பெண்களையும் அறையொன்றில் அடைத்துவைத்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய கடவுச்சீட்டு கையடக்கத் தொலைபேசியையும் அறையில் உள்ள ஏனைய பெண்களினது கடவுச்சீட்டுகளையும் கையடக்க தொலைபேசகளையும் பறித்து வைத்துள்ளனர் எனவும் அவர் தனது மகளுக்குத் தெரிவித்துள்ளார்.

மறைத்து வைத்திருந்த தொலைபேசியை பயன்படுத்தி அவர் தனது மகளை தொடர்புகொண்டுள்ளார்.

மகள் பிரபல தம்பதியினரைத் தொடர்புகொண்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த பெண்களில் அநேகமானவர்கள் ஹற்றனைச் சேர்ந்தவர்கள் என அந்தத் தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.

மகளின் தகவலைத் தொடர்ந்து வட்ஸ்அப்பைப் பயன்படுத்தி தேடியவேளை அந்தப் பெண் அபுதாபியில் இருப்பது தெரியவந்துள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்த தம்பதியினர் வட்ஸ் அப்பைப் பயன்படுத்தி அந்த பெண்ணின் ஆவணங்களை பெற்றுக்கொண்டுள்ளனர். இந்த ஆவணங்களை ஆராய்ந்தவேளை குறிப்பிட்ட பெண் அபுதாபிக்கு விசிட் விசாவில் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

ஹற்றனில் உள்ள தரகர் மூலம் கட்டுகஸ்தோட்டையில் உள்ள முகவர் குறிப்பிட்ட பெண்ணை அனுப்பியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

அந்த முகவர் நிலையம் மருதானையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்திற்கு பெண்ணின் விவரங்களை அனுப்பியமையும் அவர்கள் அந்தப் பெண்ணை ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணிபுரிவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் பணிபுரிந்தமையும் தெரியவந்துள்ளது.

பலர் இந்த விடயத்தில் ஈடுபட்டுள்ளதால் முக்கிய நபரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. – என இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து வரும் தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.

# மட்டு. மாவீரர் நினைவேந்தல் பதாதைகள் அகற்றப்பட்டுள்ளன!



மட்டக்களப்பு கிரான் சுற்றுவளைவு மையத்தின் அருகில் இரு மருங்கிலும் காட்சிப்படுத்தப்பட்ட மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் பதாதைகள் இனம் தெரியாத நபர்களால் அகற்றப்பட்டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) இவை அகற்றப்பட்டுள்ளன என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இடத்துக்கு ஏற்பாட்டுக் குழுவினர் சென்று பார்த்தபோது அவை கிழித்து அகற்றப்பட்டுள்ளதுடன் கயிறுகள் மாத்திரம் உள்ளன எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஏற்பாட்டுக் குழுவினர் தங்களது அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டனர்.

மேலும் கடந்த 15.11.2022 ஆம் திகதியன்று கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் காட்சிப்படுத்தப்பட்ட நினைவேந்தல் பதாதை இதேபோன்று அகற்றப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.



# வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக இ.தொ.கா. ஜனாதிபதியுடன் சந்திப்பு

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக மலையக மக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போதுமானதல்ல என இ.தொ.காவால் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் மலையக மக்களுக்கு தேவையான கல்வி, சுகாதாரம், அபிவிருத்தி திட்டங்களுக்காக நிதி அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இ.தொ.கா. முன்வைத்தது.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அபிவிருத்தி திட்டங்களை அதிகரிப்பது சம்பந்தமாக எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதி செயலகத்தில் இ.தொ.காவுடன் விசேட கூட்டம் நடத்தப்பட்டு தேவையான அளவுநிதி அதிகரிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



## வேடிக்கையாக வாயு துப்பாக்கியால் சுட்டதால் கதிர்காமத்தில் அது தீப்பிடித்து சிறுவன் காயம்!

கதிர்காமம், தெட்டகமுவ பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் வேடிக்கையாக வாயு துப்பாக்கியால் சுட்டதால் அது தீப்பிடித்து ஐந்து வயது சிறுவனின் தலையில் தாக்கியதில் பாதிக்கப்பட்டு அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான் எனக் கதிர்காமம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெட்டகமுவயைச் சேர்ந்த ஐந்து வயது சிறுவனே காயமடைந்துள்ளான். இந்தச் சிறுவன் பாடசாலை ஒன்றில் முதலாம் ஆண்டில் கல்வி கற்று வருபவர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹெரோயின் சுற்றிவளைப்பு; பொலிஸார் மீது கல்வீச்சு!

### 6 பெண்கள் உட்பட 11 பேர் கைது

அநுராதபுரம், புபுதுபுர பிரதேசத்தில் ஹெரோயின் சுற்றிவளைப்பின் போது பொலிஸார் மீது கல்வீச்சு மேற்கொண்டு தாக்குதல் நடத்திய 6 பெண்கள் உள்ளிட்ட 11 பேர் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சமுஹகொவிபல, புபுதுபுர பிரதேசத்தில் அநுராதபுரம் குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 14 கிராம் 220 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் 26 முதல் 51 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் புபுதுபுர, அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

சந்தேகநபர்கள் புபுதுபுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருக்கின்றனர் எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியதகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு இதன்போது ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேக நபர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வருவதற்கு முற்பட்ட போது அதனைத் தடுக்கும் விதமாக சந்தேகநபர்களின் உறவினர்களான 6 பெண்கள் பொலிஸார் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது இந்தப் பெண்கள் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, சட்டவிரோதமான முறையில் ஒன்று கூடியமை, மற்றும் பொலிஸார் மீது கல்வீச்சு மேற்கொண்டு தாக்குதல் மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23 முதல் 54 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் புபுதுபுர, அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் அனைவரும் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 17 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ராகம பொலிஸாரால் கைது

கொழும்பு, நவ. 18

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று கருதப்பட்டு நீதிமன்றத்தால் 17 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் கடந்த புதன்கிழமை ராகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 32 வயதுடைய கல்வத்த – வெலிப்பென்ன பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சந்தேகநபர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது வெலிப்பென்ன, பயகால, மீகதென்ன, பெருவளை, தொடங்கொட மற்றும் மதுகம பொலிஸ் நிலையங்களில் அவர் மீது பல்வேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு அவருக்கு நீதிமன்றத்தால் 17 தடவைகள் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் ராகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## போதைப்பொருள் வர்த்தகரை ஆயுதங்களால் தாக்கிய குழுவினர் பாணந்துறையில் கைது!

போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரை கூரிய ஆயுதங்களால் தாக்கிய, ஒருங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பாணந்துறை தெற்கு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் பிரதான சந்தேக நபரான 'கொவ்வா' என அழைக்கப்படும் நபரும் உள்ளடங்குகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


சந்தேக நபர்கள், குறித்த வர்த்தகரைத் தாக்க பயன்படுத்திய நான்கு வாள்கள், இரண்டு ஓட்டோக்கள் மற்றும் 10 கிராமுக்கு அதிகமான போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் வெளிநாட்டு பயணத்தடை நீடிக்கப்பட்டது!

குடிவரவு – குடியகல்வு சட்டத்தை மீறி கடவுச்சீட்டு வைத்திருப்பதாகக் கூறப்படும் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் வெளிநாட்டுபயணத்தடையை அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க நேற்று (வியாழக்கிழமை) உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் முறைப்பாட்டாளர் விடுத்த கோரிக்கையை கருத்திற்கொண்டே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்த முறைப்பாட்டை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் இது தொடர்பான விசாரணை அறிக்கையை அன்றைய தினம் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.





# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road, Kilinochchi**



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# சம்பந்தம் இல்லாதவரா?



என்.சத்தியமூர்த்தி

## அக்கரை / அக்கறை அலசல்



இனப்பிரச்சினை குறித்து கலந்துரையாட சம்பந்தன் பெயரில் அனுப்பப்பட்ட அழைப்பை புறக்கணித்ததன் மூலம், அவர் சார்ந்த தமிழரசுத் தலைமை தவிர ஏனைய தமிழ் கட்சியினர் அவரது வயதையும் அனுபவத்தையும், ஆளுமையையும் எல்லாம் கூட அவமதித்துள்ளனர்.

இந்தப் புறக்கணிப்பின் மூலம் செல்வம் அடைக்கலநாதனும் சித்தார்த்தனும் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற அமைப்பின் அடித்தளத்திற்கே வேட்டு வைத்துள்ளார்கள். காரணம், சம்பந்தனின் இந்த அழைப்பு, அவர் கூட்டமைப்பின் தலைவர் என்ற கோதாவில்தான் அனுப்பப்பட்டது.

செல்வம் மற்றும் சித்தார்த்தன் ஆகியோர் சம்பந்தன் அழைப்பு விடுத்த கூட்டத்தில் பங்கு பெறாமைக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். அது தனிப்பட்ட காரணங்களாக இருக்கலாம். அல்லது, கொள்கை ரீதியான முடிவாகவும் இருக்கலாம். ஆனால், பத்திரிகை செய்திகளின் படி, இவை எதனையுமே அவர்கள் சம்பந்தனிடமோ, அவருக்காக அவரது அழைப்பை மின்னஞ்சல் செய்த சுமந்திரனிடமோ ஏதாவது விதத்தில் தெரிவித்தனரா என்பது குறித்து செய்திகள் இல்லை.



இதில், சித்தார்த்தன் தன்னிச்சையாக முடிவெடுத்து செயல்படுத்துவது கிடையாது. செல்வத்தை பொறுத்தவரையில் அவர் சம்பந்தன் வீட்டு கூட்டத்தைப் புறக்கணித்தமை மன்னிக்க முடியாத குற்றம்.

அந்த கூட்டதினத்தின் காலைப்பொழுதில், கூட்டமைப்புத் தலைவர்கள் அனைவருமே தலைநகர் கொழும்பில் ஐ.நா. அலுவலகத்தில் கூடியிருந்தனர் என்றும், அப்போது சம்பந்தன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் முகமாக செல்வம் அன்று மாலை அவரது வீட்டிற்கு வருவதாக உறுதியளித்தார் எனவும் செய்திகள் தெரிவித்தன.

தன்னால் அந்த கூட்டத்தில் பங்கெடுக்க முடியாது என்று செல்வம் உறுதியாக இருந்திருந்தால், அதனை தெளிவாகவும், தைரியமாகவும் சம்பந்தனிடம் கூறுவதற்கு அவருக்கு மனமிருக்கவில்லையா? அல்லது மனோதைரியம் இருக்கவில்லையா? இதில் இரண்டில் எது காரணமாக இருந்தாலும், அவர் எதிர்பார்க்கும் கூட்டமைப்புத் தலைமைக்கு அவர் தகுதி படைத்தவர் தானா, என்ற கேள்வி எழுகிறது.

அதற்காக, சம்பந்தனின் அனைத்து செயல்பாடுகளும் திறந்த புத்தகமாக இருந்தன என்பதல்ல பொருள். மாறாக, அவரது தலைமையில் குறைகாணும் செல்வம், சித்தார்த்தன் போன்றவர்கள் எல்லோரும், அவர்கள் சுட்டிக்காட்டும் சம்பந்தனின் குறைகளும், குறைபாடுகளும் இல்லாதிருந்தால் மட்டுமே, அவர்கள் சம்பந்தனைக் குறைகூற முடியும். ஆனால், உண்மை நிலைமை இதுவல்ல.

### மண் குதிரை

இன்னும் சொல்லப்போனால், இந்த வருடம் ஜனவரி மாதத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒரு சேரக் கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டும் என்று செல்வம் தன்னிச்சையான முயற்சியை முன்னெடுத்தார். அதன் மூலம், செல்வம், கூட்டமைப்பு மற்றும் சம்பந்தனின் தலைமையைப் புறக்கணிக்கிறார் அல்லது உள்ளே இருந்தபடியே எதிர்க்கிறார் என்ற காரணத்தினாலேயே பிற தமிழ் கட்சிகள் அந்த கூட்டத்தில் பங்கெடுத்தன.

ஆனால், அந்தக் கூட்டத்தை முக்கிய கட்சியான தமிழரசு புறக்கணித்தமையைத் தொடர்ந்து, மனோ கணேசனும், ரவூப் ஹக்கீமும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சம்பந்தனும் தமிழரசும் செல்வத்தின் முயற்சியில் பங்கெடுத்து, அவரது பெயர் ரிப்பேர் ஆகாமல் பார்த்துக் கொண்டனர். அதற்கு செல்வம் செய்யும் கைமாறு இதுதானோ என்னவோ? என்ன, தமிழரசு கடசி சேர்ந்ததும், செல்வம், மனோவையும் ஹக்கீமையும் கழற்றி விட்டது, அவர்களுக்கு அவர் செய்த கைமாறு எனலாம்.

செல்வம், தனக்கு தானே என்று, கூட்டமைப்பின் பிரதித் தலைவர் என்று அறிவித்துக்கொண்டார். அது போன்றே, தனது கட்சியின் பேச்சாளரான சுரேந்திரனை, சுமந்திரனுக்கு கீழாக கூட்டமைப்பின் பிரதி பேச்சாளராகவும் பட்டம் சூட்டினார். அவரது இந்த ஆசைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஈடு கொடுக்கும் வகையில் அவரது செயல்பாடுகள் இல்லை. ஏன், சம்பந்தனிடம் முகம் கொடுத்து அவரது வீட்டு கூட்டத்தில் பங்குபெற முடியாது என்பதை சொல்ல முடியாதவரா, தமிழ் இனத்தின் முடிவுகளை அரச தரப்பினரிடம் ஆணித்தரமாக வாதிடப்போகிறார்?

அந்த விதத்தில், செல்வத்தின் செயல்பாடு, மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு சமம். அது மட்டும் அல்ல. நடு கடலில், மூழ்க இருக்கும் ஒரு படகில் இருந்து அடுத்த படகிற்கு, எந்தவித பிடிமானமும் இல்லாமல் தாவி சேர்வதற்கு ஒத்தது அவரது செயலும் செயல்பாடுகளும்.

### பல்லில்லாத பாம்பு?

இதனால் எல்லாம், சம்பந்தன் தரப்பு நிலைமையை சரியான விதத்தில் கையாளுகிறது என்பதல்ல பொருள். எப்போது, ஜனவரி மாதம் செல்வம் தன்னிச்சையாக சமஷ்டி உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசுவதற்கும், இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதும் முகமாக ஓர் அனைத்து தமிழ் கட்சியினரின் கூட்டத்தை கூட்டினாரோ, அப்போதே கூட்டமைப்பும் அதன் தலைமையும் பல்லில்லாத பாம்பாக ஆக்கப்பட்டுவிட்டன.

அன்று, அதனை வழக்கம் போல ஒரு முறுகல் என்றே சம்பந்தன் கணக்காக்கி இருப்பார் என்று தோன்றுகிறது. மாறாக, அது தனது தலைமைக்கும் கூட்டமைப்பிற்கும் விடப்பட்ட சவால் என்ற உண்மையை அவர் உணர்ந்திருந்தால், ஒன்றில், செல்வம்வகையறாக்களை அழைத்து பேசி, கூட்டமைப்பின் உள்கட்சி விவகாரங்களை சரி செய்திருக்க வேண்டும். அல்லது, தான்தோன்றி தனமாக தனக்கு தானே கூட்டமைப்பு பதவியை வழங்கிக் கொண்ட செல்வம் மற்றும் சுரேந்திரன் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

அல்லது, இவற்றிற்கெல்லாம் ஒரு படி மேலே போய், தனது தலைமைத்துவத்திற்கும் ஆளுமைக்குமான காலம் மலையேறிவிட்டது என்ற வகையில், தனது கூட்டமைப்பு தலைமை பதவியில் இருந்து விலகியிருக்க வேண்டும். அவரை கௌரவ தலைவராகவோ, ஆலோசகராகவோ, கூட்டமைப்பின் அனைத்து கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கும்.

சம்பந்தன் அவ்வாறு செய்திருந்தால், அவரது காலத்திற்கு பின்னர் நிகழ இருக்கும் கூட்டமைப்பு தலைமைக்கான உள்குத்து வேலைகள் இப்போதே துவங்கியிருக்கும். உண்மைதான். ஆனால், கூட்டமைப்பே அவரது தலைமையின் கீழ் காணாமல் போயிற்று என்ற பழிச்சொல் அவர் மீது விழாது. விழுந்திருக்காது.

### மனிதாபிமானமற்ற செயல்

தற்போதைய பிரச்சினை என்னவோ, சம்பந்தன் வீட்டில் கூட்டப்பட்ட கூட்டம் தான். அதற்காக அவரது வீட்டிற்கு வர மாட்டோம் என்று மட்டுமே ஏதாவது தமிழ் தலைவர் முடிவு செய்திருந்தால், அது மனிதாபிமானமற்ற செயல். கூட்டமைப்பு தலைவராக சம்பந்தன் எத்தனையோ தவறுகளை செய்திருக்கலாம். ஆனால், அவரது வயதையும் உடல் நிலைமையையும் அவர்கள் மனதில் கொண்டிருக்க வேண்டும். அது போன்றே, கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகளாக அவரது அரசியல் பணிகளையும் தலைமைத்துவ மாண்புகளையும் அவர்களால் புறம் தள்ளிவிட முடியாது.

என்றாலும், சம்பந்தனும், ஏன் இவ்வாறு ஒரு கூட்டத்தை ஒரு நாள் மட்டுமே நோட்டீஸ் கொடுத்து கூட்டினார் என்பது புரியவில்லை. கொழும்பிலேயே அப்போது இருந்த பிற தமிழ் எம்.பிக்களுக்கும் சரி, தொலைவில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணத்திலும் இருக்கும் பிற தமிழ் தலைவர்களுக்கும் சரி, வேறு பல குடும்ப நிகழ்ச்சிகளோ வேறு ஏதாவது வேலைகளோ இருந்திருக்கலாம் என்பதை ஏன் அவர் கருத்தில் கொள்ளவில்லை என்று தெரியவில்லை.

சம்பந்தன் கூறியதாக வரும் பத்திரிகை செய்திகளின் படி, தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அன்று கொழும்பில் இருந்ததால், அவர் இவ்வாறான கூட்டத்திற்கு ஒழுங்கு செய்தார் என்ற கருத்து நிலவுகிறது. அப்படியானால், கூட்டமைப்பிற்குள்ளேயும் வெளியேயும் தமிழரசு தவிர பிற பிரதிநிதித்துவ கட்சிகளும் உள்ளன என்ற உண்மையை அவரால் இன்னமும் கிரகித்துக் கொள்ள முடியவில்லையா? அல்லது, சகித்துக் கொள்ள முடியவில்லையா?

இன்னும் சொல்லப்போனால், இன்னும் எத்தனை நாள்கள் தான், அரசோடு சாராத கட்சிகளுக்கே தமிழ் தேசியம் என்ற பட்டம் பொருந்தும் என்று இவர்கள் எல்லோரும் தங்களை தாங்களே ஏமாற்றிக் கொள்ளப் போகிறார்கள்? அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான் போன்றோர் எல்லோரும் கூட இதே தமிழ் வாக்காளர்களால் தான் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். எனவே, மற்ற தமிழ் கட்சியினர், புறக்கணிப்பது இந்த தலைவர்களையா, அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களையா?

### நிழல் யுத்தம்

ஆனால், தற்போது அரங்கேறி உள்ளது, கூட்டமைப்பினுள்ளே வெறும் வாரிசு அரசியல்தான். தனது வீட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்திற்கான அழைப்பை, சம்பந்தன் சுமந்திரன் அல்லாது, தனது செயலாளர் யார் மூலமாவது ஈ–மெயில் செய்திருந்தால் கூட, அன்று வசதிபடாதோர் கூட, சரியான பதில் அளித்திருப்பார்கள். ஆனால், அவர்களது குறி எல்லாம், சுமந்திரன் தான்.

எப்போது, இனப்போர் முடிந்த கால கட்டத்தில், சம்பந்தன், அது வரை அரசியலுக்கு சம்பந்தம் இல்லாத சுமந்திரனையும், பின்னர் விக்னேஸ்வரனையும் உள்ளே இழுத்தாரோ, அப்போதே இந்த நிழல் யுத்தம் துவங்கி விட்டது. இருவரில் விக்னேஸ்வரனின் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் என்ற அந்தஸ்தை யாராலும் புறம் தள்ளிவிட முடியவில்லை. அதைவிட முக்கியமாக, விக்னேஸ்வரன் மூலம் முதலில் சுமந்திரனை ஓரம் கட்டி விடலாம், பின்னர் அவரை கவனித்துக் கொள்ளலாம், என்று காய் நகர்த்தியவர்களும் இருந்தார்கள்.

விக்னேஸ்வரனும் சரி, சுமந்திரனும் சரி, முன்னாள் போராளி குழுக்களை சேர்ந்தவர்கள் அல்லர். மாவை, செல்வம், சித்தார்த்தன் உள்ளிட்ட முன்னாள் போராளிகளுக்கு, சம்பந்தன் தங்கள் வகையறாக்களையும் அவர்களது தியாகங்களையும் கொச்சைப்படுத்துகிறார் என்பது போன்ற ஆதங்கமும் இருந்தது. இன்னமும் இருக்கிறது.

ஆனால், உண்மை அதுவல்ல. எப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சர்வதேசத்தோடு சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதோ, அன்றே, இது குறித்து விவாதிக்க ஆங்கிலத்தில் ஆளுமையும், அரசியல் யாப்பு குறித்த விடயங்களில் புலமையும் இருக்க வேண்டும் என்பது நிர்ப்பந்தமானது.

(13 பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்




ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்று கூறுகின்றார்கள். ஆனால் ஏழைதான் சிரிப்பதில்லையே? பின்னர் எவ்வாறு இறைவனைக் காணலாம்? பெரும்பாலானோர் நினைத்துக்கொள்கின்றனர், ஏழைகளுக்கு பொருளுதவி செய்வதன் மூலம் அவர்களின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்று. ஆனால் அது உண்மைப் பொருள் அன்று.

ஏழை என்பது இங்கே எளியவனைக் குறிக்கின்றது. எளிமையான வாழ்க்கை வாழப் பழகிக் கொள்வதற்கு மிகவும் தேவையான ஒன்று போதுமென்ற மனம் ஆகும். போதுமென்ற மனம் படைத்தது, தனக்குக் கிடைத்து மிஞ்சியவற்றைப் பிறருடன் கொடுத்து மகிழும் போது புன்னகை முகத்தில் தாங்கி நிற்கும். அப்போது அந்த ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது உறுதி.

அதை விடுத்து, அள்ளி அள்ளிச் சொத்து சேர்த்து அதில் பாதியைக் கிள்ளிக் கொடுத்தால் இறைவனைக் காணலாம் என்பது தவறு. அது அடிப்படையிலேயே தவறு. ஏழை என்பவன் எப்போதுமே கையேந்துபவனாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏழைகளுக்குக் கொடுக்கும் தானம் இறைவனுக்குக் கொடுக்கும் தானத்திற்குச் சமனாகும். இதற்கு உதாரணமாக சிறுகதையைக் கூறலாம்.

பண்ணையார் ஒருவர் தனது தோட்டத்தில் நூறு பழங்கள் கொண்ட ஒரு வாழைத் தாற்றை வெட்டினார். அவ் வாழைத் தாற்றை கோயிலுக்குக் கொடுக்க எண்ணித் தனது வேலைக்காரனை அழைத்தார். அவனிடம் அந்த வாழைத் தாற்றைக் கொடுத்து ‘இதனைக் கோயிலில் கொடுத்துவிட்டு வா’ என்றார். அவனும் அவ்வாறே வாழைத்தாற்றைக் கோயிலில் கொடுத்துவிட்டான். அன்றிரவு பண்ணையாரின் கனவில் தோன்றிய இறைவன் ‘இன்று நீ கொடுத்த ஒரு பழம் எனக்குக் கிடைத்தது’ என்றார். திடுக்கிட்டு எழுந்த பண்ணையார் ‘இறைவா நான் நூறு பழங்களை அல்லவா அனுப்பிவைத்தேன்?’ என்றார். அதற்கு இறைவன் ‘இல்லை எனக்கு ஒரு பழம் தான் வந்து சேர்ந்தது’ – என்றார்.

மறுநாள் காலையில் பண்ணையார் வேலைக்காரனை அழைத்து ‘நான் கொடுத்த வாழைத் தாற்றைக் கோயிலில் கொடுத்தாயா?’ என்று கேட்டார். அவன் ‘ஆம்’ என்று கூறினான். பண்ணையாருக்குக் கோபம் வந்துவிட்டது. அவனின் கன்னத்தில் அறைந்து ‘உண்மையைச் சொல். இல்லையேல் அடித்தே கொன்றுவிடுவேன்’ என்றார். அவன் ‘உண்மையைச் சொல்லிவிடுகின்றேன். வாழைத் தாற்றை கோயிலுக்குக் கொண்டு சென்றுகொண்டிருக்கும் போது வழியில் ஒரு ஏழை பசியால் வாடியிருந்தான். பார்க்கப் பரிதாபமாக இருந்ததால் ஒரு பழத்தைப் பிடுங்கிக் கொடுத்தேன். மீதியைக் கோயிலில் கொடுத்துவிட்டேன்’ – என்றான். பண்ணையாருக்குப் புரிந்துவிட்டது. ஏழைக்குக் கொடுத்த பழமே இறைவனுக்குச் சென்றுள்ளது என்றும் கோயிலில் கொடுத்த பழங்கள் இறைவனுக்குச் சேரவில்லை.


கோயிலில் உள்ள இறைவனுக்கு நீ ஏதாவது கொடுத்தால் அது ஏழைக்குச் சென்றடையாது. ஆனால் ஏழைக்கு ஏதாவது கொடுத்தால் அது இறைவனைச் சென்றடையும்.

கோயிலில் உள்ள இறைவனுக்குக் கொடுப்பதும் ஏழைக்குக் கொடுப்பதும் ஒன்றா? என்று சிலர் கேட்கலாம். ஏழையின் வயிறு அஞ்சல் பெட்டி. இறைவனுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை ஏழையிடம் கொடுத்தால் அது இறைவனிடம் சென்றடையும்.

‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’.

**- சி. நிஷோமினா -**
**(அச்சுவேலி மத்திய கல்லூரி)**

# மனதில் உறுதி வேண்டும்



மனம் என்றால் என்ன? உள்ளம், எண்ணம், தெளிவு, என்றெல்லாம் தமிழ் அகராதி கூறும்.

மனதில் நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும். தீய வழியில் சென்றால் துயரங்களும், வேதனைகளும் தான் மிஞ்சும். அதனால் தான் ‘மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்’ என்று ஆன்றோர் கூறினர்.

மனம் என்றால் மனிதன், மனிதனின் வெற்றி அவனின் மனப்பாங்கிலே அமைகின்றது. குற்றமற்ற மனத்துடன் வாழ்வதே அறமாகும். தூய்மையற்ற மனத்தோடு செய்யும் செயற்பாடுகள் அறமல்ல. அவை வெறும் ஆரவாரமே. மனதில் உறுதி காணப்பட வேண்டும். உறுதி உடைய மனம் எதையும் செய்யத் துணிவு கொள்ளும். நமது மனம் தூய்மையாக இருப்பது நமது நண்பர்களைப் பொறுத்தே அமைகின்றது என்பது வள்ளுவப் பெருந்தகையின் உறுதியான கருத்து ஆகும். மனத்தை தளர விடக்கூடாது. மனதில் ஏற்படும் நல்ல சிந்தனைகள் தான் நமது வாழ்க்கைக்கு உறுதி அளிக்கும்.

உறுதியோடு உள்ள மனம் எப்போதும் பயத்தை அறியாது. உறுதியோடு போராடும் வீரன் பகைவர்களின் சூழ்ச்சிகளையும் தாண்டி வெற்றி பெறுவான்.

தற்காலத்தில் பல பிரச்சினைகளைக் கண்டு மனிதர்கள் கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். அவ்வாறில்லாது மன உறுதியோடு இருந்து செயற்பாட்டால் அப் பிரச்சினைகள் நீங்கிவிடும்.

ஒரு சந்தர்ப்பத்தில் தோல்வி அடைந்தால் அதை நினைத்து மனம் வருந்திக் கொண்டிருப்பதைவிட அடுத்த சந்தர்ப்பம் வரும் வரை மனதில் உறுதி இருந்தால் வாழ்க்கையில் என்ன தடைவந்தாலும் வெற்றி பெறலாம். இவ் உலகத்தில் எல்லோரும் இயன்றவரை மன உறுதியோடு செயற்படுங்கள்.

**- த.ஜம்சிகா -**
**(அச்சுவேலி மத்திய கல்லூரி)**


# நாம் தான் பிடித்திருக்கிறோம்

ஒரு பாம்பு வளைந்து, நெளிந்து தரையில் ஊர்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு குட்டிக் குரங்கு வேடிக்கையாக அந்தப் பாம்பைக் கையிற் பிடித்துவிட்டது. பாம்பும் குரங்கின் கையை இறுக்கமாகச் சுற்றிக் கொண்டது. தன் விஷப் பல்லைக் காட்டிச் சீறியது. குரங்குக்குக் குட்டிக்கும் பயம் வந்து விட்டது. சற்று நேரத்திலேயே அதன் கூட்டமெல்லாம் கூடி வந்துவிட்டன. ஆனாலும் யாருமே அந்தக் குட்டிக் குரங்குக்கு உதவ முன்வரவில்லை.

ஐயய்யோ.! இந்தப் பயங்கரமான விஷமுள்ள பாம்பிடம் இவன் தேவை இல்லாமல் மாட்டிக் கொண்டானே. இது தீண்டினால் உடனே மரணந்தான். இவன் பிடியை விட்டாற் பாம்பு இவனைத் தீண்டிவிடும். இவன் தப்பிக்கவே முடியாது என்று குட்டிக் குரங்கின் காதுபடவே அந்தக்குரங்குக்கூட்டம் பேசிவிட்டு ஒவ்வொன்றாகக் கலைந்து சென்றுவிட்டன.

தன்னுடைய கூட்டமே தன்னைக் கைவிட்டு விட்ட சூழ்நிலையின் வேதனை, எந்த நேரமும் தன்னைத் தீண்டத் தயாராக இருக்கும் நச்சுப் பாம்பு, மரணபயம் எல்லாம் சேர்ந்து குரங்கை வாட்டிவதைத்தன. ஐயோ!. புத்திகெட்டுப் போய் நானே வலியவந்து இந்த மரணவலைக்குள் மாட்டிக்கொண்டேனே என்று குரங்கு ஓலமிட்டது. நேரமும் ஓடிக்கொண்டே இருந்தது. உணவும், நீரும் இல்லாமல் உடல் சோர்ந்து போய் விட்டது. கிட்டத்தட்ட மயங்கிச் சரியும் நிலைக்கு வந்துவிட்டது.

கண்கள் இருளத்தொடங்கின. அந்த நேரத்தில் ஞானி ஒருவர் அந்த வழியே வந்தார். குரங்கு இருந்த நிலைமையைப் பார்த்ததும் நடந்ததை உணர்ந்து கொண்டார். குரங்கை நெருங்கி வந்தார். சொந்தங்களெல்லாம் கைவிட்டுவிட்ட நிலையிற், தன்னை நோக்கி ஞானி ஒருவர் வருவதைக் கண்ட குட்டிக் குரங்கிற்குக் கொஞ்சம் நம்பிக்கை வந்தது. ஞானியும் நெருங்கிவந்து, எவ்வளவு நேரந்தான் பாம்பைக் கையிலேயே பிடித்துக்கொண்டு கஷ்டப்படப் போகிறாய்? அதைக் கீழே போடு! என்றார்.



குரங்கோ, ஐயய்யோ! நான் பிடியைத் தளர்த்தினால், பாம்பு என்னைக் கொன்றுவிடும் என்றது. ஞானி அந்தக் குரங்கைப் பார்த்து, பாம்பு இறந்து ரொம்ப நேரமாச்சு. அதைக் கீழே வீசு என்றார். அவர் வார்த்தையைக் கேட்ட குரங்கு பயத்துடனே பிடியைத் தளர்த்திப் பாம்பைக் கீழே போட்டது. நிஜமாகவே பாம்பு குரங்குப் பிடியில் இறந்துபோயிருந்தது.

குரங்கு நிம்மதிப் பெருமூச்சு விட்டு, ஞானியை நன்றியுடன் பார்த்தது.

இனிமேல் இப்படி முட்டாள்த்தனம் பண்ணாதே என்றபடி ஞானி கடந்து போனார். நம்மில் எத்தனையோ பேர் தேவையற்ற பிரச்சினை என்ற செத்த பாம்பைக் கையிற் பிடித்துக் கொண்டு விட முடியாமல் கதறிக் கொண்டிருக்கிறோம்.

# சர்வதேச சுற்றுச் சூழல் மாநாட்டில் இந்தியா இளைஞர்களுக்காகத் தொடங்கிய பிரசாரம்






இந்தியாவின் தேசிய இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (NMNH), சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP), இணைந்து 18 முதல் 23 வயது வரையிலான இளைஞர்களை, நிலையான வாழ்க்கை முறையின் செய்தியை தாங்கியவர்களாக ஊக்குவிப்பதற்காக நமது வாழ்நாளில் (In Our LiFEtime) பிரசாரத்தைத் தொடங்கியது.

உலகெங்கிலும் உள்ள இளைஞர்கள் லைஃப் என்ற கருத்துடன் எதிரொலிக்கும் காலநிலை நடவடிக்கை முயற்சிகளை மேற்கொள்வதை அங்கீகரிப்பதை இந்த பிரச்சாரம் கருதுகிறது.

இது எகிப்தின் ஷர்ம் எல் – ஷேக் நகரில் நடைபெறும் COP 27 இல் (ஐ.நாவின் பருவ நிலை மாற்றம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் ) உள்ள இந்தியா பெவிலியனில் ஒரு பக்க நிகழ்வில் தொடங்கப்பட்டது.




COP 27 இல் உள்ள இந்தியா பெவிலியனில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய இந்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ், இன்றைய இளைஞர்கள் முக்கிய பங்குதாரர்களில் ஒருவர். பொறுப்பான நுகர்வு முறைகளை வளர்ப்பதற்கும் வாழ்க்கை முறை தேர்வுகளில் செல்வாக்கு செலுத்துவதற்கும் இளைய தலைமுறையினரிடையே வாழ்க்கையைப் பற்றிய புரிதலை வளர்ப்பது அவசியம். வரவிருக்கும் தலைமுறைகள் அவர்கள் அவர்களது பூகோளக் கிரக மக்கள் சார்புடையவர்களாக மாற்றும். – என்றார்.

சுற்றுச்சூழல் உணர்வுடன் வாழ்வதில் ஆர்வமுள்ள உலகெங்கிலும் உள்ள இளைஞர்களின் யோசனைகளுக்கு இந்த பிரச்சாரம் உலகளாவிய அழைப்பை அளிக்கிறது. இளைஞர்கள் தங்கள் திறனுக்குள் சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறைகளுக்கு பங்களிக்கும் காலநிலை நடவடிக்கைகளைச் சமர்ப்பிக்க ஊக்குவிக்கப்படுவார்கள், அவை நிலையான மற்றும் அளவிடக்கூடியவை, மற்றும் உலகளவில் பகிரக்கூடிய நல்ல நடைமுறைகளாக செயல்படுகின்றன என்று யாதவ் கூறினார்.

பூபேந்தர் யாதவ் மேலும் கூறுகையில், இந்தியாவின் பல பகுதிகளில், நமது இளைஞர்கள் பல நூற்றாண்டுகள் பழமையான பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான வலுவான விருப்பத்தை வெளிப்படுத்தியதற்கு பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. அங்கு அவர்களின் அன்றாட வாழ்க்கை முறை சுற்றுச்சூழலை மதித்து, பாதுகாத்து, வளர்ப்பது முக்கிய காரணம் என்றார்.

இளைஞர்கள் புதிய பழக்கவழக்கங்களை பிரபலப்படுத்துவதில் திறமையானவர்கள். தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் சிறந்த பங்களிப்பை வழங்குகிறார்கள். இளைஞர்கள் குறைந்த கார்பன் தொழில் தேர்வுகளைச் செய்ய வேண்டும். அவர்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக அத்தகைய வாழ்க்கை முறையைப் பின்பற்றவும் வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்

உள்ளூர், தேசிய மற்றும் உலக அளவில் முடிவெடுப்பதில் தீவிரமாக பங்கேற்க இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று நான் உறுதியாக உணர்கிறேன் என்று மத்திய அமைச்சர் கூறினார்.

தொலைநோக்கு சட்டத்தை இயற்றுவதற்கு வழிவகுக்கும் முயற்சிகளை அவர்கள் தீவிரமாக ஆதரிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எங்கள் வாழ்நாள் பிரச்சாரத்தில் இளைஞர்கள் நிலையான வாழ்க்கை முறை நடைமுறைகளின் தூதுவர்களாக மாறுவதற்கும், பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் இயற்கை வள மேலாண்மையில் முன்னணியில் இருக்கும் தலைவர்களாக வளருவதற்கும் ஒரு சிறந்த வழியாகும் என்று பூபேந்திர யாதவ் கூறினார்.

காலநிலை மாற்றம், பின்பற்றுதல்(தழுவல்) மற்றும் தணிவித்தல் பற்றிய உரையாடலில் அதிக இளைஞர்களை இந்த பிரச்சாரம் ஈடுபடுத்தும் என்றும், அவர்களின் கவலைகள், பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளை உலகத் தலைவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான தளத்தை அவர்களுக்கு வழங்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இது பருவநிலை பற்றிய விழிப்புணர்வு அதிகமாக இருக்கும் இளைஞர்களின் குரல்களை வலுப்படுத்தும். அத்தோடு இளம் பருவநிலை சம்பியன்களுக்கு அங்கீகாரத்தை வழங்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

உலகெங்கிலும் உள்ள இளைஞர்கள் கொண்டு வரும் பருவநிலை நடவடிக்கை பயணம் மற்றும் மாற்றத்தின் கதைகள் பற்றி கேட்க ஆவலுடன் காத்திருக்கிறேன் என்று மத்திய அமைச்சர் யாதவ் கூறினார்.

“நிகர பூச்சியத்தை (பூச்சிய காபன் உமிழ்வை) நோக்கிய எங்கள் பயணத்தில் அவர்கள் தங்கள் குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள குடிமக்களை தீவிரமாக பங்கேற்பாளர்களாக ஆக்குவார்கள் என்று நான் நம்புகிறேன். – என்றும் அவர் குறிப்பிட்டார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# ஜேர்மன், பிரான்ஸ் தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் மோடி ஆலோசனை



பாலியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டையொட்டி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜேர்மன் அதிபர் ஓலாஃப் ஷோல்ஸை கடந்த புதனன்று சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின் போது, வர்த்தகம், நிதி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா மற்றும் ஜேர்மனி இடையேயான உறவுகளை வலுப்படுத்த பல்வேறு தலைப்புகளில் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

பிரதமர் அலுவலகம் தனது டுவிட்டர் பக்கத்தில், பாலியில் ஜி – 20 உச்சி மாநாட்டையொட்டி பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அதிபர் ஸ்கோல்ஸ் இடையே பயனுள்ள சந்திப்பு நடைபெற்றது. இந்தியா – ஜேர்மனி இடையேயான நட்புறவை மேம்படுத்தும் நோக்கில், குறிப்பாக வர்த்தகம் நிதி மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கிய துறைகளில் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.” – என்று தெரிவிக்கப்பட்டது.

பாலியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டையொட்டி, சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கையும் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின் போது, பசுமைப் பொருளாதாரம் மற்றும் சூரிய ஆற்றல் உள்ளிட்ட வளர்ந்து வரும் பகுதிகளில் ‘இந்தியா – சிங்கப்பூர் ஒத்துழைப்பை’ வலுப்படுத்துவதற்கான மகத்தான வாய்ப்புகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். நரேந்திர மோடி மற்றும் லீ சியென் லூங் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் கலாச்சார தொடர்புகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் பேசினர்.

முன்னதாக, பாலியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டையொட்டி பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசினார். இரு தலைவர்களும் பல்வேறு விவகாரங்கள் குறித்து பயனுள்ள ஆலோசனைகளை மேற்கொண்டனர் என பிரதமர் அலுவலகம் ட்விட்டரில் தெரிவித்துள்ளது. இரு நாடுகளும் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் நிலையான வளர்ச்சியை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து பிரதமர் மோடியும், பிரான்ஸ் அதிபர் மேக்ரானும் விவாதித்தனர்.

முன்னதாக, இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ, ஜி20 அமைப்பின் தலைவர் பதவியை பிரதமர் நரேந்திர மோடியிடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்தார். டிசம்பர் 1, 2022 அன்று ஜி20 தலைவர் பதவியை இந்தியா ஏற்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 184

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சுபாஸ்கரனின் வரவு – இலட்சிய நோக்கா?

இலட்சிய நோக்கா என நான் கேள்வி எழுப்பியது, நாட்டின் தமிழ் மக்களின் இன்றைய நிலைகளில் தனது வியாபாரங்களை பெருக்கிக்கொள்ளும் அல்லது அதற்கான மேலும் பலமான தளத்தை அமைத்துக் கொள்ளும் இலட்சியமா, அன்றில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வான தூண்டுகோலாக தனது அரசியல் நட்புக்களையும் பேரங்களின் ஆளுமைகளால் செயல்படுத்தும் இலட்சியமா என்பதுதான்.

சுபாஸ்கரன் முல்லைத்தீவில் முள்ளியவளையில் பிறந்து, இளமையிலேயே தந்தையை இழந்து, விடுதலைப் போரின் கோரங்களை அனுபவித்து, முன்னேற வழி ஏதும் இல்லாமல், அதே காரணங்களால் நாட்டை விட்டு வெளியேறிய தனது சகோதரனைத் தொடர்ந்து பார்ஸைச் சென்றடைந்து, அகதியாக வாழ்வைத் தொடங்கி, விடாமுயற்சியாலும், தனக்குத் தரப்பட்ட சந்தர்ப்பங்களை சரியாகவும் பயன்படுத்தி, முன்னேறியவர்.

பாரிஸில் அவரது குடும்பம் நடத்திய உணவகத்திலும், பின் பலசரக்கு கடையிலும், உழைத்து, அங்கு வாழ்ந்த தமிழ் குடும்பங்கள் மட்டுமல்லாமல், உலக அடங்கலும் இருந்து குடிபெயர்ந்து தஞ்சம் கோரிய ஆப்பிரிக்க, கிழக்கு ஐரோப்பிய மக்களின் அவலங்களையும், ஆதங்கங்களையும் அனுபவ ரீதியாக அறிந்தவர். அவர்கள் யாவருமே தங்களது தாய் நாட்டில் இருந்த உறவுகளுடனும், பல நாடுகளில் அகதிகளாகச் சிந்தி சிதறுண்டு கிடந்த மற்ற உறவுகளுடனும் தொடர்பு கொள்ளத் தவித்த காலங்கள். நேரடித் தொலைபேசி கட்டணங்கள் அவர்களது வருவாயை மீறியிருந்தன. சில நிறுவனங்கள் தொலைபேசி அட்டைகளை அறிமுகப்படுத்திய நேரங்களில், அந்தத் தொலைபேசி அட்டைகளுக்கு பலத்த கிராக்கி அதன் பாவனைகளால் இருந்தது. சில காலங்களில் என்னவோ அப்படியான தொலைபேசி அழைப்பு அட்டைகளின் வரவு பாரிஸில் இல்லாமல் போனது.

அந்த அட்டைகளுக்காக அவரது பல சரக்குக் கடைக்கு அலைந்த மக்களின் ஏக்கங்களை அவதானித்த சுபாஸ்கரன், இப்படியான அட்டைகளைத் தானே உற்பத்தியாக்கி, வியாபாரம் செய்தால் என்ன என்ற எண்ணம் தோன்றி, அதை நடைமுறைப்படுத்தினார். பின்னர் மொபைல் தொலைபேசிகளின் பாவனைகளும் அதிகரிக்க, தொழில்நுட்பங்களின் வளர்ச்சிகளையும் பாவித்து 'லைக்கா' நிறுவனம் பாரிய முன்னேற்றம் கண்டது. இளமையின் கற்றுக் கொண்ட வியாபார யுக்திக



ளைத் தவிர, அவருக்கு பாரிய வியாபார பின்னணி இருக்கவில்லை.சொத்து முதல் என்று கூறிக்கொள்ள எதுவும் இருக்கவில்லை. முன்னேற வேண்டும் என்ற இலட்சியமும் அதன் வேட்கையும் இருந்தன. ஆகவேதான் பின் நாள்களில் சுபாஸ்கரன்"என்னிடம் ஒன்றுமே இருக்கவில்லை. ஆனால் எனக்கு முன்னால் கட்டவிழ்ந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முன்னேறினேன். அது மற்றைய சந்தர்ப்பங்களை உருவாக்கியது" எனத் தனது செவ்விகளில் தெரிவித்தார்

முள்ளியவளையில் இளைஞனாகவும், பின் பாரிஸில் இருந்த போதும் சினிமாப் பார்ப்பதில் அலாதி பிரியம் கொண்டவராக இருந்த சுபாஸ்கரன், வணிகத்துறையில் வைக்கா மூலம் தடம் பதிக்க லண்டனிலிருந்து சினிமா படங்களின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஐங்கரன் குழுமத்தின் தூண்டுதலில் அங்கு குடி பெயர்ந்து, அவற்றிலும் நாட்டம் காட்டியதே அவர் பின் படங்களில் முதலீடு செய்து வருவாய் பெற்றது,

தனது வணிகத்தின் வளர்ச்சிக்கும் பக்க பலத்திற்கும் இங்கிலாந்தின் ஆளும் கொன்ஸர்வேட்டிவ் கட்சிக்கு பல வகைகளில் நிதி உதவிகள் தந்து அரசியல் பரப்பில் பேசப்பட்ட போது, ஸ்ரீலங்காவின் இனப் பிரச்சினைக்கு ஆதரவு தந்த புலம் பெயர் குழுக்கள் இவரின் அனுசரணைகளை நாடாமல் இருக்கவில்லை.



அவரது ஈடுபாடுகள் சர்வதேச, இங்கிலாந்து நிர்வாக அலகுகளினால் கூர்மையாகக் கவனிக்கப் பட்டன. விடுதலைப் புலிகள் அமைப்பு பல நாடுகளில் பயங்கரவாதிகளாகப் பட்டியலிடப் பட்டிருந்தமையால் அவர்களதுபணத்தை தன் நிறுவனம் கையாளுவதை பற்றி கவனமாக இருந்தார். அப்படி இருந்தும் புலன்விசாரணை குழுக்களும், வியாபாரப் போட்டியாளர்களும் தினமும் இரண்டரை லட்சம் பவுனுக்கு மேற்பட்ட தொகை காசாக லண்டனில் பல பகுதிகளில் இருந்தும் பெறப்பட்டு வைப்பிலிடப்படுகின்றது எனவும், மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் ஒருவரின் செலவினத்திலிருந்து வெளிநாட்டு கம்பெனி ஒன்றின் 95 வீதப் பங்குகளுக்கு பெருமளவு தொகை தந்து பெற்றுக் கொண்டு, அதன் மூலம் ஸ்ரீலங்காவின் தொலைபேசி பாவனையாளர்களில் 100 கோடி அமெரிக்க டொலர் வருமானத்திற்கு வழிவகுக்கப்பட்டது என்றும், இது போல் நடந்த வேறு பேரங்களால் 'லைக்கா பயணங்கள்' lyca fly என்ற நிறுவனம் ஸ்ரீலங்காவின் விமான சேவையின் முதல் தர சேவைகளுக்கு தரம் உயர்த்தப்பட்டார் எனவும் செய்திகள் இருந்தன.

ஆனாலும் தானும் தனது குடும்பமும் சுற்றத்தாரும் அனுபவித்த அவலங்களின் பின்னணிகளில் ஓரங்கட்டப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களுக்காக தனது செல்வத்தின் கணிசமான பங்கை நன்றிக் கடனாக திருப்ப விரும்புகிறேன், ஆனால் அது தர்மத்தை கையளிப்பது போல் அல்லாது அவர்கள் வாழ்க்கையில் முன்னேறும் வகைகளை கட்டி எழுப்பவே என்றார்.

2010 இல் தனது தாயார் ஞானாம்பிகையின் பெயரில் ஞானம் நிறுவனம் என்று அறக்கட்டளையை நிறுவி, மனிதாபிமானத்திலும் உயர்ந்து நின்றார். அந்த அறக்கட்டளையின் மூலம் வவுனியாவின் சின்னடம்பன் கிராமத்தில் விடமைப்புத் திட்டமும், சிவன் இல்லத்தில்



585 அகதி குழந்தைகளின் பராமரிப்பும், பத்தாயிரம் மாணவர்களின் படிப்பு வசதிகளுக்கான உபகரணங்கள், சைக்கிள்கள் என பெருந்திட்டங்கள் அமல்படுத்த வழி வகுக்கப்பட்டன. அப்படியான வளர்ச்சித் திட்டங்கள் அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், புத்தளம், பொலன்னறுவை, திருகோணமலை, வவுனியா என அடையாளம் காணப்பட்டு அவற்றில் முதல் தொகுதி முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, இரண்டாம் தொகுதி அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை, மூன்றாவது தொகுதி புத்தகம் மன்னார், வவுனியா எனவும் வரையறுக்கப்பட்டன. முதல் கட்டமாக தரப்பட்ட நிதிகளை தவிர்த்து இரண்டாம் கட்டத்திற்கு ஞானம் அறக்கட்டளை என்று 3000 கோடி ரூபாக்களை ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல்,

இந்தப் பணிகளின் முன்னெடுப்பு



களுக்காக இந்து சமய அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது. அவை அப்போது பரபரப்பாக பேசப்பட்டன. அவற்றின் நடையாக்கங்கள், வளர்ச்சிப் பயன்களை பாதிக்கப்பட்ட மக்கள் அறிவார்கள். சுபாஸ்கரனின் இவற்றுக்கான முன்னெடுப்பும் அரசுடன் இருந்த ஆளுமையும் புலம்பேரில் பலரின் வியப்புக்கு ஆளாகின ஏனெனில் அச்சமயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளையும் கட்டுமானங்களையும் ஏற்படுத்த விரும்பிய எவ்வளவோ புலம்பெயர் அமைப்புகளும் அனுமதி இன்றி தவித்தனர். ஸ்ரீலங்காவில் செலவிடப்படும் தொகைகள் மஹிந்த தரப்பிலிருந்து வர அவை வெளிநாட்டு நாணயங்களில் திருப்பப்படுகின்றனவா என்ற கேள்விகளும் இவர்களிடம் எழாமமல் இல்லை. ஆயினும் நவம்பர் 2013 ஸ்ரீலங்காவில் நடந்த பொதுநலவாய நாடுகளின் வியாபார வளர்ச்சிகளின் கூட்டத்துக்கு வருகை தந்த பிரித்தானியாவின் கொன்சவேர்ட்டிவ் பிரதமர் டேவிட் கமரூன் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சுக்களின் அறிவுறுத்தல்களை ஏற்காது பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திக்க நடந்த ஏற்பாடுகளுக்கு எல்லாம் சுபாஸ்கரன் பின்னிருந்தார் எனவும், அந்தச் சம்மேளனத்துக்காக ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டு நிதிகளுக்கு தங்கநிலை ஆதரவாளர்களாக (Gold Sponsor லைக்கா நிறுவனம் இருந்தது.

இவை பற்றி அளவலாவும் போது ஒரு நண்பர் இந்திரா காந்தி கூட விடுதலைக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் தந்து கொண்டே 'எங்களிடையே தமிழ் பயங்கரவாதிகள் இல்லை, அகதிகள் தான் இருக்கின்றார்கள்' என எத்தனையோ ஊடகங்களுக்கு செவ்வி தந்தார். பின்னர் ஜே.ஆர் தமிழ் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் படங்களையும் விவரங்களையும் உளவு தகவல்கள் மூலம் பெற்று அவற்றை நேரடியாகவே இந்திரா காந்திக்குச் சமர்ப்பித்த போது அவர் 'இவை பாகிஸ்தான் மூலம் கிடைத்ததுதானே?' என்று கேட்டு அதனைத் திசை திருப்பி விட்டார்.

வணிகத்திலும் அரசியலிலும் தொடர்புகள் பலவிதங்களாகவும் பன்முகங்களாகவும் விபச்சார விடுதிகளுக்கு வருவோர் போவோர் போலவுமிருக்கும்.

அதுபோல தற்சமயம் கூட்டமைப்பின் விடுதிக்கு சுபாஸ்கரன் விருந்தாளியாக வருகிறாரா, அன்றில் அவரது நோக்கங்கள் இலட்சியங்களுக்காகப் புனிதமானவையா என்பதுதான் கேள்வி.

(வளரும்....)

# ஆசி. கந்தராஜாவுக்கு பாராட்டு விழா



கைதடியைச் சேர்ந்தவரும், ஆஸ்திரேலிய சிட்னிப் பல்கலைக்கழகப் பேராசிரியரும், விஞ்ஞானியுமான எழுத்தாளர் ஆசி. கந்தராஜாவுக்கு பாராட்டு விழாவும் கௌரவிப்பும் கைதடியில் நடைபெற உள்ளன.

இலங்கையின் கலாசார அமைச்சால் வருடாந்தம் வழங்கப்படும் சாகித்திய விருதை இவரது பணச்சடங்கு எனும் சிறுகதைத் தொகுதி அண்மையில் பெற்றுக் கொண்டது.

இதனைப் பாராட்டி ஓய்வுபெற்ற அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் இந்த நிகழ்வு எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கைதடி மேற்கு, இணுங்கித் தோட்டம் அன்னை இரத்தினம் மணி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இச் சாகித்திய விருது 2001 ஆன் ஆண்டும் ஆசி கந்தராஜாவின் 'பாவனைபேசலன்றி' என்னும் சிறுகதைத் தொகுதிக்கு வழங்கப்பட்டது.

கைதடி இலக்கிய ஆர்வலர்களும், கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையை முன்பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி.த.சுபத்திராதேவி நிகழ்த்த ஆசியுரையை கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோவிலின் பிரதம குரு சிவசிறி யோ.குருசாமிக் குருக்கள் நிகழ்த்துவார்.

அறிமுக உரையை ஓய்வுபெற்ற அதிபர் சி.பவளகுமாரன் நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை பேராசிரியர். சி.சிவலிங்கராஜா, ஓய்வு பெற்ற அதிபர் திருமதி.ப.செல்வநாயகம், எழுத்தாளரும், ஓய்வு பெற்ற மாவட்ட சமூக சேவைகள் அலுவலருமான வே. தபேந்திரன், கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் அ.லோகநாதன், கவிஞரும் கல்விமானுமாகிய சோ.பத்மநாதன், ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், எங்கடபுத்தகங்கள்பதிப்பாசிரியர் கு.வசீகரன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

விழா நாயகன் கௌரவிப்பு, ஏற்புரை ஆகியவற்றைத் தொடர்ந்து நன்றியுரையை கு.சுரேஸ்குமார் நிகழ்த்த உள்ளார்.

## 22 வருட கொடுஞ் ........

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாரின் அனுமதியுடனும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் சிபாரிசின் பேரிலும் எதுவித நிபந்தனைகளுமின்றி உடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

சிறையிலிருந்து விடுதலையாகிய பின்னர் பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

எனது 22 வருட கால சிறைவாசத்திலிருந்து ஜனாதிபதி எதுவித நிபந்தனைகளுமின்றி என்னை விடுதலை செய்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் ஜனாதிபதியின் பரிசீலனைக்கு இணங்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரும் அனுமதி வழங்கியமையுடன் நீதி அமைச்சரும் இதற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

நான் சிறையில் இருந்தபோதும் எனது ஆன்மீக கடமைகளை செய்வதற்கு அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர், செயலாளர் மற்றும் பிரதித் தலைவர் தனபாலன் ஆகியோரும் எனக்கு பேருதவியாக இருந்துள்ளமையுடன் எனது விடுதலைக்காக அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு இன்றைய இந்த விடுதலையை உறுதிப்படுத்தினார்கள்.

முக்கியமாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ்சமூகங்கள், உணர்வாளர்கள் அனைவரும் எனது விடுதலைக்கு தங்களால் இயன்ற ஆதரவை வழங்கியுள்ளனர்.

குறிப்பாக கனடா டொரொன்டோவில் உள்ள நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் ஏற்பாட்டாளர் ரோய் சமாதானம், லண்டனைச் சேர்ந்த மனிதநேய செயற்பாட்டாளர் ராஜன் ஆசீர்வாதம் போன்றவர்களுடன் ஏனையவர்களும் எனது விடுதலை தொடர்பாக ஜனாதிபதியுடன் அவ்வப்போது பேசி வந்தார்கள்.

எனது இந்த விடுதலைக்கு முழுமையான காரணம் சிறைத்துறை அதிகாரிகளும் சிறை தலைமை செயலகமுமாகும். ஜனாதிபதிக்கு எனது ஆவணங்கள் முழுமையாக பரிசீலித்து எனது விடுதலைக் கான ஒழுங்குகளை செய்து தந்தார்.

எனக்காக அவ்வப்போது நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்த தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் மனிதநேய அமைப்புகளுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். - என தெரிவித்தார்.






# வீழ்ச்சியடைந்து செல்லும் தேயிலை தொழிலை பாதுகாக்க அரசாங்கத்தின் நடவடிக்கை என்ன?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

அரசாங்கத்தின் இயற்கை விவசாய வெறியின் விளைவில் தேயிலை தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாக இதனை நம்பிவாழும் 5 இலட்சம் மக்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் வழங்கும் தீர்வு என்ன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேட்ட கேள்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

உலகின் முன்னணி தேயிலை ஏற்றுமதியாளர் மற்றும் உலகின் உயர்தர தேயிலை வர்த்தக நாமம் என சர்வதேசநன் மதிப்பை பெற்றிருந்த எமது நாட்டின் தேயிலை தொழில் கிட்டத்தட்ட முற்றாக வீழ்ச்சியடைந்தமை கடந்த அரசாங்கத்தின் இயற்கை விவசாய பிரவேச வெறியின் விளைவுகளில் ஒன்றாகும்.

இரசாயன உரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், தேயிலை விளைச்சல் மற்றும் அதன் தரம் வேகமாக வீழ்ச்சியடைந்தது. தேயிலைத் தொழிலின் இலாபமீட்டல் தன்மை குறைந்து வருவதால்,பெரிய அளவிலான தேயிலைத் தோட்டங்கள் படிப்படியாக தரிசு நிலங்களாக மாறி வருகின்றன. சிறு மற்றும் நடுத்தர அளவிலான தேயிலை தோட்டங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளின் நிலைபேறு தன்மை சரிந்துள்ளது.

வீழ்ச்சி கண்டுள்ள தேயிலை உற்பத்தி சுழற்சியை அவசரமாக மீட்டெடுப்பது அந்நிய செலாவணியை மீட்டெடுப்பதற்கான வழிமுறையாக மட்டுமல்லாமல், இந்தத் தொழிலை நம்பியுள்ள கிட்டத்தட்ட 5 லட்சம் மக்களின் நலனுக்காகவும் இன்றியமையாது நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதன் பிரகாரம்,இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, அரசாங்கத்திடம் இருந்து பின்வரும் கேள்விகளுக்கு குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

தேயிலை பயிர்ச்செய்கையை தொடர்ச்சியாகவும் பயனுள்ளதாகவும் பராமரிக்க குறைந்தது வருடாந்தம் 5 வீத அளவேனும் மீள்நடவு செய்ய வேண்டும். தேயிலை உற்பத்திக்குத் தேவையான உரம் மற்றும் மெட்டாசோடியம் பூச்சிக்கொல்லிகளின் தட்டுப்பாடு கார ணமாக தேயிலை மீள நடுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப்பிரச்சினைக் குத் தீர்வு காண அரசாங்கம் வழங்கும் தீர்வுகள் யாவை?

தேயிலை தொழிலுக்கு அத்தியாவசியமான இரசாயன உரங்களின் விலை தற்போது சந்தையில் மிகவும் அதிகரித்துள்ளது. அவ்வாறே, பல்வேறு பகுதிகளில் கொள்முதல் செய்ய உரமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உரத் தட்டுப்பாட்டைப் போக்கவும், நியாயமான மற்றும் மலிவு விலையில் உரங்களை வழங்கவும் அரசாங்கத்திடம் குறிப்பிட்ட வேலைத் திட்டமொன்றுஉள்ளதா? அவ்வாறு இருப்பின், அது யாது?



தேயிலைத் தொழிலில் பயன்படுத்தப்படும் கிளைபோசேட் களைக்கொல்லியானது, மாற்று வழிகள் எதுவும் அறிமுகப்படுத்தப்படாமல் ஒரேயடியாக தடைசெய்யப்பட்டதால்,தரம் குறைந்த மற்றும் அதிக தீங்கு விளைவிக்கும் களைகொல்லிகள் விவசாயிகள் மத்தியில் பெருக வழிவகுத்தது. தரமற்ற களைகொல்லிகளை சந்தையில் இருந்து அகற்ற அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை? தரத்துடன் கூடிய மாற்று களைக்கொல்லிகளை மானிய விலையில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்க அரசாங்கத்திடமுள்ள வேலைத் திட்டம் யாது?

புதிய தொழில்நுட்ப அறிவு தேயிலைத் துறை சார் விவசாயிகளுக்கு போதிய அளவில் கிடைக்காமை, உயர்தொழில்நுட்ப தேயிலைச் செய்கை,தேயிலை பறிக்கும் தொழில்நுட்பம், புதிய தொழில்நுட்ப பயன்பாடுகளைப் பயன்படுத்துவதற்குத் தேவையான பிரயோக அறிவு உள்ளடங்களாக தேயிலை தொழிற்சாலைகளை பராமரித்துச் செல்வதற்கும், முன்னேற்றத்துக்குத் தேவையான அறிவு இல்லாமை, உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் குறிப்பாக தொழிலாளர் பற்றாக் குறை ஆகியவை தேயிலை தொழில் துறையின் எதிர்கால இருப்பை நிச்சயமற்றதாக்கியுள்ளது. இந்நிலையை கையாள அரசாங்கம் தற்போதைய நிலையில் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?

தேயிலை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்த முடியுமான,அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த,தேயிலை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட பெருமளவான தரிசு நிலங்கள் மலையகம், தாழ்நில பிரதேச அதிகளவு தோட்டங்களை அண்மித்த பகுதிகளில் காணப்படுகின்றன. இந்நிலங்களை துரிதமாக சிறு தேயிலைச் செய்கைக்காக சிறு தோட்ட செய்கையாளர்களுக்கு அல்லது வேறு ஏதாவது முறையின் கீழ் பயன்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் குறிப்பிட்ட வேலைத்திட்டம் உள்ளதா? அவ்வாறு இருப்பின் அது யாது?

தேயிலை கைத்தொழிலுக்கு விதிக்கப்படும் செஸ் வரியை நம்பியுள்ள சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன தேயிலை கைத்தொழிலை நிலை நிறுத்துவதற்குப் போதிய வசதிகளை செய்து கொடுப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிறுவனங்களை விரைவான நிர்வாக மறுசீரமைப்பிற்குட்படுத்தி, தேயிலை தொழிற்துறையின் நிர்வாகம், உற்பத்தி மற்றும் விற்பனையை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா?

தேயிலை தொழிலுக்காக தங்கள் வியர்வையையும் உழைப்பையும் வாரி இறைக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் சிறு தேயிலை தோட்டக்காரர்கள் தங்கள் முதுமைக்கு பிறகு கடுமையான சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இத்தகைய வயதான தேயிலை தொழிலாளர்களை கவனித்துக்கொள்ள காப்பீட்டுத் திட்டம் அல்லது ஓய்வூதியத் திட்டமொன்றை ஸ்தாபிக்க வாய்ப்புள்ளதா எனக் கேட்கின்றேன். – என்றார்.

# சமூகச் சீரழிவுகள் அதிகரிக்க வாய்ப்பு!

## பேராசிரியர் றோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவிப்பு



பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் தற்கொலை செய்து கொள்ளும் வீதம் அதிகரித்துள்ள சூழ்நிலைக்கு மத்தியிலும், விரைவில் மேலும் 20 அமைச்சர்கள் பதவியேற்கவுள்ளனர். மக்கள் மீது வரி சுமைகளை சுமத்தியே இந்த அமைச்சர்களுக்கான செலவுகள் நிர்வகிக்கப்படும்.

இதே நிலைமை தொடர்ந்தால்தற்போதுள்ள சமூக சீரழிவுகள் மேலும் அதிகரிக்கும் என்று ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் றோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் வரவிற்கும் , செலவிற்குமிடையிலான இடைவெளியை மக்கள் மீது வரி சுமைகளை சுமத்தியும் , கடனைப் பெற்றும் சமநிலைப்படுத்துவதே அரசாங்கத்தின் திட்டமாகவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

செலவுகளைக் குறைத்தல் , கடன் மறுசீரமைப்பு மற்றும் ஊழல் மோசடிகளைக் குறைத்தல் என்பனவே அந்த நிபந்தனைகளாகும். எனினும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவு திட்டத்தில் இம்மூன்று விடயங்களுமே தோல்வியடைந்துள்ளன.

இவ்வாறான நிலைமைக்கு மத்தியிலும் விரைவில் மேலும் 20 அமைச்சர்கள் பதவியேற்கவுள்ளனர். இவர்களுக்கான செலவுகளை நிர்வகிப்பதற்கும் மக்கள் மீதே வரி சுமை சுமத்தப்படும்.

பொருளாதார நெருக்கடிகளால் சமூக சீரழிவுகளும் அதிகரித்துள்ளன. இவ்வாறான சூழலுக்கு மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளவரவு–செலவுதிட்டம்வெள்ளை யானையாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

நாட்டிலுள்ள சகல சிறு உற்பத்திகளும் பாதிக்கப்பட்டு , அந்நிய செலாவணி முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயக ஆட்சி இன்மையால் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் பணத்தை அனுப்புவதை நிறுத்தியுள்ளனர்.

சுற்றுலாத்துறையும் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்த நெருக்கடிகள் அனைத்தையும் மேலும் தீவிர மடையச் செய்யும் வகையிலேயே இம்முறை வரவு – செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் விவசாயத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக , கஞ்சா பயிர்செய்கையை ஊக்குவிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை நகைப்பிற்குரிய விடயமாகும்.

அத்தோடு நாட்டில் இலாபமீட்டும் தொழிற்துறைகளையும் வெளிநாட்டவர்களுக்கு தாரை வார்ப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. – என்றார்.

# சம்பந்தம் ...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரன் ஏன் அன்ரன் பாலசிங்கத்தை தன் பக்கத்தில் இருத்திக் கொண்டார்? இந்த விடயங்களை மனதில் கொண்டே, சம்பந்தன் சுமந்திரன் மற்றும் விக்னேஸ்வரனை கட்டாயப்படுத்தியே, அரசியலுக்குள் இழுத்தார் என்பதே உண்மை.

தற்போதைய நிலைமையில், சரியோ, தவறோ, சம்பந்தன் சுமந்திரனையே தனது அரசியல் வாரிசாக முன்னிறுத்துகிறார் என்ற எண்ணம் கடைசி தமிழன் வரை சென்றடைந்து விட்டது. இந்த பிரச்சினையில் கூட விக்னேஸ்வரன் முரண்டு பிடித்திருக்கலாம். அதன் காரணமாகவும், கூட்டமைப்பை விட்டு, அவர் விலகி இருக்கலாம்.

ஆனால், சம்பந்தன், இன்னொரு விடயத்தையும் மனதில் கொள்ள வேண்டும். தமிழ் நாட்டில் கருணாநிதி, ஐந்தாவது, கடைசி முறையாக முதல்வராக இருந்த காலகட்டத்தில் (2006 – 11), அவரிடம் அவரை ஒத்த தி.மு.க. நண்பர்கள், ஏன், அவரது காலத்திலேயே, அரச பொறுப்புகளின் ஒரு பகுதியையாவது அப்போதே நாற்பது வருட அரசியல் அனுபவம் வாய்ந்த மகன் ஸ்டாலினிடம் ஒப்படைக்கக் கூடாது என்று வினவினர்.

அதற்கு, கருணாநிதி கூறிய பதில், தற்போது, சம்பந்தன், சுமந்திரன் ஆகிய இருவருக்கும் பொருந்தும். கருணாநிதி கூறியதாவது: ‘இன்று கட்சிக்குள் ஸ்டாலின் இது வரை வளர்ந்து விட்டார். ஆனால், அரசு தலைமை பொறுப்பு என்பதை நானோ, பிற தி.மு.க. தலைவர்களோ முடிவு செய்து விட முடியாது. அது, வாக்காளர்களாகிய மக்களின் கையில் மட்டுமே இருக்கிறது. அதனை நான் அவர் மீது திணித்தால், அதனால் மட்டும் மக்கள் அவரை ஏற்றுக்கொள்வார்கள் என்று நிச்சயம் இல்லை.’

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.11.2022இல் வெளியிடப்பெற்றது.